20-10-1991

# யாழ்நகரப் பாதுகாப்பு வலையத்தினுள் தாக்குதல்இல்லைஎன செஞ்சிலுவை உறுதி

யாழ் பெரியாஸ்பத்திரி உட்பட பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் உள்ள மக்கள் தத்தமது வீடுகளில் இருக்கலாம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்று தெரிவித்தனர். நேற்று யாழ் நகரப்பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது பாதுகாப்பு அமைச்சுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வானொலித் தொடர்பு சாதன மூலம் உடனடியாகத் தொடர்பு கொண்டனர், இதனையடுத்து பாதுகாப்பு வலயப் பகுதியில் தாக்குதல் எதுவும் நடாத்தப்படமாட்டாது என இராணுவ வட்டாரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உறுதியளித்ததாக செல்வி பியற் மெனிக்கா ஆஸ்பத்திரியில் தஞ்சம் புகுந்த பொது மக்களிடமும் வீதியில் நின்ற மக்களிடமும் தெரிவித்தார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் 'வாக்கி டோக்கி'யுடன் பாதுகாப்பு வலயம் பகுதியிலும் யாழ் ஆஸ்பத்திரியிலும் நேற்று முழுநாளும் நடமாடியதையும் காணமுடிந்தது. 07, 01

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5-00

முரசொலி

முரசு 05 ஒலி 280 பிரசோற்பத்தி ஐப்பசி 03 (20 10 1991) ஞாயிறு

## கிளிநொச்சியில் ஊரடங்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று காலை 5 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்துள்ளது

## பரவலாக ஷெல் தாக்குதல்

நேற்றுக்காலை 8 மணியிலிருந்து பலாலி இராணுவமுகாமிலிருந்தும்வசாவிளான், கட்டுவன், தெல்லிப்பழை, கீரிமலை காவலரண்களில் இருந்தும் முற்பகல் வரை கடும் ஷெல் தாக்குதலை படையினர் மேற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிறுகாயம்

நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டு வீச்சு ஷெல் தாக்குதலின்போது பீதியினால் பாதுகாப்புத்தேடி ஓடியபோது பல பொதுமக்கள் சைக்கிள்களில் மோதப்பட்டு சிறுகாயமடைந்தனர். (07)

## யாழ் ஆஸ்பத்திரி வழமைபோல

யாழ் போதனா வைத்தியசாலை நேற்று வழமைபோல இயங்கியது வெளிநோயாளர் பகுதி, கிளினிக்குகள் முழுமையாகச செயற்பட்டன

வைத்தியசாலை ஊழியர்கள் அநேகர் நண்பகலுடன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் ஹெலி சூடு

சாவகச்சேரிப்பகுதியிலும் முற்பகல் வேளையில் ஹெலி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டது. 07

## இரத்தம் தேவை

யாழ் போதனாவைத்திய சாலையிலுள்ள இரத்த வங்கியில் தற்போது இரத்தம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய நிலையில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டு நடவடிக்கை ஒபரேஷன் "வலம்புரி"

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட ஒபரேஷன் 'வலம்புரி' என்ற குடாநாடு இராணுவ நடவடிக்கை தனியே விமானத்தாக்குதலுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிகளூடாக வந்த படையினர் குடாநாட்டைக் கைப்பற்றுவர் என கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும், நேற்று திடீரென தீவுப்பகுதி இராணுவ நடவடிக்கை மட்டுமே இடம் பெறும் என பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே படையினரை எதிர்கொள்ள விடுதலைப்புலிகள் அணிகளும் தயார் நிலையில் பரவலாக நிறுத்தப்பட்டுள்ளன.

விமானப்படையின் குண்டு

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகரில் விமானங்கள் நேற்றுக்காலை குண்டு வீச்சு

குண்டு வீச்சு விமானங்கள் நேற்று யாழ் நகரை அண்டிய பகுதியில் காலை 9 மணி முதல் நண்பகல் வரை தாக்குதல் மேற்கொண்டன.

யாழ் பண்ணைப் பகுதியிலும், கொட்டடிப் பகுதியிலும் இரண்டு பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள் இலக்கின்றித் தாக்குதல்களைத் தொடுத்தன.

பொம்மர் விமானங்கள் குண்டுத் தாக்குதல்கள் நடாத்துகின்ற அதேவேளை ரொக்கட் தாக்குதல்களையும் இடையிடையே மேற்கொண்டன,

—04 ஆம் பக்கம் பார்க்க

## விமானப்படையை எதிர்த்து புலிகள் தாக்குதல்

பண்ணைப் பகுதியில் விடுதலைப்புலிகள் விமானஎதிர்ப்புத் துப்பாக்கியால் மேற்கொண்ட தாக்குதலில் ஹெலிக் கொப்டர்கள், சீ-பிளேன் பல அடி உயரத்தில் சென்று தாக்குதல் தொடுத்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

இதனையடுத்து ஹெலிக் கொப்டர் யாழ் நகர்ப் பகுதிகளின் வெவ்வேறு இடங்களிலும் கலிபர்த்தாக்குதல்களை மேற்கொண்டது 01

## இராணுவ நடவடிக்கையில் 5ஆம் கெமுனு படைப்பிரிவு

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைக்கு 'ஒபரேசன் வலம்புரி' எனப் பெயரிடப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

லெப்டினன்ட்கேணல் விமல் ஜயசூரிய தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 3 ஆவதும், நான்காவதுமான காலாட் படை இதில் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்பில் பாது

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவுப் பகுதியில் கவசவாகன நடமாட்டம்

மண்டைதீவுப் பகுதியில் இராணுவ ஜீப், பவள் கவச வாகனங்கள் நடமாடுவது காணக்கூடியதாகவிருக்கிறது.

இராணுவத்தினருக்கு உத

—04 ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்க அதிபர் பயணம் ரத்து

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகரின் கொழும்புப் பயணம் ஊரடங்குச்சட்டம் காரணமாகத் தடைப்பட்டுள்ளது.

குடா நாட்டில் உள்ள அகதிகளின் நிலைமைபற்றியும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தாதியர் சேவை

அவசரகால தாதியர் சேவையில் கடமையாற்றுவதற்கு தாதிகள் தேவைப்படுவதாக சாயி மருத்துவக் கல்லூரி இயக்குனர் கோரிக்கை விடுத்துள்ளார் சாயி மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற, பயின்றுகொண்டிருக்கின்ற சகல உதவித் தாதியர்களுக்கும் இவர் அழைப்பு விடுத்துள்ளார்,

## இருவர் தடுத்துவைப்பு

ஸ்பார்க் பிளக்குகள், சைக்கிள் செயின்கள், பென்ரோச் பற்றரிகள், ரயர் சொலூசன் என்பவற்றை வடக்கே எடுத்து வந்த இருவர் வவுனியா தாண்டிக்குளம் சோதனை நிலை

—04 ஆம் பக்கம் பார்க்க

# நேற்று தீவுப்பகுதி, பலாலி பகுதிகளிலிருந்து யாழ் நகரை நோக்கிச் ஷெல் தாக்குதல்

நேற்றுக் காலை 9 00மணி முதல முற்பகல் வரையில் பலாலி இராணுவ முகாமிலிருந்தும், மண்கும்பான், அல்லைப்பிட்டியிலிருந்தும் படையினர் யாழ்நகர் நோக்கி பதினைந்துக்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பலாலியிலிருந்து ஐந்து ஷெல்கள் கொட்டடிப் பகுதி குடிமனைகளுக்குள் விழுந்து வெடித்தன. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உட்பட அறுவர் காயமடைந்தனர் கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமநாதன் ப. லவதாஸ், ப. குசலநாதன், திருமதி இராசசெல்லமணி சின்னத்துரை, சுப்பிரமணியம் சின்னத்துரை (60) ஆகியோரே காயப்பட்டவர்களாவர்.

அல்லைப்பிட்டி மண்கும்பா

—04 ஆம் பக்கம் பார்க்க

★ வடமேல் மாகாண சபை கண்டனம்:

# புத்தளத்தில் அமெ. விஞ்ஞானிகள் தங்குவதற்கு அரசு அனுமதி!

அமெரிக்க விஞ்ஞானிகள் இலங்கையில் தங்க அனுமதிக்கப்பட்டதை வடமேல் மாகாண சபை ஆட்சேபித்துள்ளது.

இந்த அமெரிக்க விஞ்ஞானிகளுக்காக புத்தளம் இரணவிலை என்ற இடத்தில் 800 கோடி ரூபா செலவில் புதிய ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்கும் அரசு துரித நடவடிக்கையினை எடுத்துள்ளது இதற்காக மீன்பிடித் தொழிலாளர்களுக்குச் சொந்தமான 1200 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது

அமெரிக்க விஞ்ஞானிகள் ஏன் இங்கு வர வேண்டும்? என வடமேல் மாகாண சபைக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் நோநில் கேள்வி எழுப்பினார்

வொய்ஸ் ஒப் அமெரிக்க பரிவர்த்தனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டதைப் போல இந்த விஞ்ஞானிகளையும் இங்கு தங்க அனுமதித்ததன் மூலம் இலங்கை அரசு இன்னொரு சனியனையும் விலைக்கு வாங்கப் போகிறது என அங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

## பெர்னாட்ஷா வழங்கிய 'புதிய' அன்பளிப்பு

நகைச்சுவை எழுத்தாளரும் நாடக ஆசிரியருமான பெர்னாட்ஷா ஒரு முறை பழைய புத்தகத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார் அது தான் எழுதிய புத்தகம் என்பதைக் கண்டு அதை எடுத்து விரித்துப் பார்த்தபோது, முன்னர் தான் ஒரு நண்பருக்கு அன்பளிப்புச் செய்த புத்தகம் அது எனத் தெரிந்து கொண்டார். அதனை உடனே விலைகொடுத்து வாங்கினார். முன்னர் அன்பளிப்பு என எழுதிய வாசகத்தின் கீழ் புதுக்கிய அன்பளிப்பு என எழுதி பழைய அன்பருக்கே அனுப்பி வைத்தார்.

## 'பிரேமா' இன்று திருமலையில்

ஜனாதிபதி பிரேமதாஸா இன்று திருமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

திருமலையில் புதிதாக அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்களை அவர் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

அமைக்கப்படவுள்ள வீடுகளில் கணிசமானவை பெரும்பான்மை இனத்தவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

## ஆசிய ஒளிபரப்புச் சேவை நவ. 15ஆம் திகதி ஆரம்பம்

பி. பி. ஸியின் ஆசியாவுக்கான முழுநேர உலகத் தொலைக்காட்சி ஒளிபரப்பு அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆசியச் செய்தித் தகவல் அலை வரிசை மூலம் செய்மதியுடன் இந்த ஒளிபரப்பு மேற்கொள்ளப்படும். ஹாங்காங் ஹச்சிஸன் கம்பனி இந்தச் செய்மதியை இயக்குகிறது.

38 நாடுகளிலுள்ள 270 கோடி மக்கள் இந்த ஆசிய ஒளிபரப்பைக் கண்டு களிக்க முடியும்.

கடந்த ஏப்ரலில் ஐரோப்பாவுக்கு இத்தகைய சேவை ஏற்பட்டது. அடுத்து ஆபிரிக்கா, அதன் பின் தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கு இச்சேவை விஸ்தரிக்கப்படும்.

## தொண்டர்களுக்கு அவசர அழைப்பு!

வடமராட்சி, தீவுப்பகுதிகளிலிருந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உதவு முகமாக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் தங்கள் பகுதிகளில் இருக்கும் முகாம்களுக்குச் சென்று தசவை புரியுமாறு கோப்பாய் பிரிவுச் செயலாளர் இ. மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

## மன்னாரில் தொலைக்கல்வி வகுப்பு; 86 பயிலுநர்களுக்கு அனுமதி

மன்னார் மாவட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.

மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது இந்த வகுப்புக்களில் 86 பயிலுநர் ஆசிரியர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

## மனித உரிமையைப் பேணும் திட்டம்; இந்தியப் பிரதமர் நிராகரித்தார்

மனித உரிமைகளைப் பேணும் நாடுகளுக்கே சர்வதேசக் கடன்கள், உதவிகள் வழங்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது

ஹராரேயில் நடந்துகொண்டிருக்கும் பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகளுடன் கடன்உதவிகளைத் தொடர்புபடுத்தும் இக்கோரிக்கையை பெருமளவில் உதவி வழங்கும் நாடுகளான பிரிட்டனும், கனடாவும் காமன்வெல்த் மகாநாட்டில் முன்வைத்துள்ளன.

இக்கோரிக்கை ஏற்கப்படின் அதனால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இந்தியாவும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்ற அச்சத்தினாலேயே அதனை நிராகரிக்க இந்தியா முடிவெடுத்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## திருக்கோவில் மக்கள் வங்கியை திறக்கும் முயற்சி நிறுத்தம்

திருக்கோவில் மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் திறக்கும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால வன்செயல்களினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தற்போது திருக்கோவில் பகுதியிலேயே வசித்து வருகின்றனர்.

இந்த வங்கிக் கிளையை மீண்டும் திறக்குமாறு இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய வங்கி நிர்வாகம் அதற்கான முயற்சிகளை எடுத்திருந்தபோதிலும் அவை பின்னர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன, (06)

## ஒப்படைகள் வந்து சேர்ந்தன

90 / 91 ஆம் ஆண்டு டிப்புளோமா - முகாமைத்துவ நெறி மாணவர்களினால் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட 5 ஆம் 6 ஆம் ஒப்படைகள் திருத்தப்பட்டு யாழ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

மாணவர் பதிவுப் புத்தகத்துடன் திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் அவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

## சந்தாப்பணம் குறைப்பு

ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களுக்கான வருடாந்த சந்தாப்பணம் 5 ரூபாவில் இருந்து 3 ரூபாவுக்குக் குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ தே க. விசெயற்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது

கட்சியில் மிகக் கூடுதலானோரை அங்கத்தவர்களாக சேர்ந்துக் கொள்வதற்காகவே இந்த 'சலுகை' வழங்கப்பட்டுள்ளதாம். (06)

## தொடர்சொற்பொழிவு ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் வாரந்தோறும் பிரதி ஞாயிறு தோறும் நடாத்தப்படும் தொடர் சொற்பொழிவு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அறிவித்துள்ளார். இந் நிகழ்ச்சி தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## வெளிவாரிப் பட்டப்படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும், 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுகம் நிகழ்ச்சியும் 1991 10.22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளன. வெளிவாரிப்பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள், இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும்படி கோரப்படுகின்றனர் நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன.

முதல் அமர்வு - முதற்கலை மாணவர்கள்
காலை 9 00 - காலை 11.00

இரண்டாவது அமர்வு - முதல் வர்த்தக மாணவர்கள்
காலை 11 30 - 1.00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20.10.91 வெளிவாரிப்பதிவுப்பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றேன்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

10017

# செய்தி உலகம்

## அமெரிக்காவில் கொர்பச்சேவின் நூல்

ஜனாதிபதி கொர்பச்சேவ் தான் எழுதிய 74 பக்கநூலை அமெரிக்க ஹார்பர் கொலின்ஸ் பிரசுர நிறுவனத்துக்கு 5 இலட்சம் டாலருக்கு (2 கோடியே 10 இலட்சம் ரூபா) விற்றிருப்பதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் தனக்கு எதிராக ஏற்பட்ட சதிப்புரட்சி குறித்தும் தனது சொந்தத் தவறுகள், கவலையீனம், ஜனநாயக இயக்கத்தில் பிளவுகள், கருத்து வேறுபாடுகள் குறித்தும் கொர்பச்சேவ் தனது நூலில் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார்.

## மதகுரு மீது குற்றச்சாட்டு

முழங்கால் தெரியும் ஆடையுடன் இளவரசி டயானாவைப் பள்ளிவாசலுக்குள் அனுமதித்தமைக்காக முஸ்லிம் மதகுரு ஒருவருக்கு எதிராகப் பாகிஸ்தானில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லாகூரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றுக்குக் கடந்த மாதம் இளவரசி விஜயம் செய்திருந்தார் பாதணிகளைக் கழற்றி வைத்த பின் தலைக்கு முக்காடு அணிந்த நிலையில் பள்ளிவாசலுக்குள் பிரவேசித்த போதிலும் இளவரசி முழங்கால் வரையில் மட்டுமேயான இளம் பச்சை உடையை அணிந்து சென்றதால் அவை பிரயோசனமற்றதாகி விட்டதாகச் சில முஸ்லிம் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி மதகுரு கடந்த வருடம் எதிர்க் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோவுக்கு வாக்களித்தவர்கள் - நாஸ்திகர்கள் என்றும் ஏனெனில் பெண்கள் அரசியற் தலைமைக்கு வர முடியாது என்றும் கூறியதன் மூலம் சர்ச்சைக்குரியவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நவம்பரில் ஜனாதிபதி தேர்தல்

ஆர்கின்ஸாஸ் கவர்னர்பில் கிளிண்டன் அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளராக முன்வந்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் சார்பாக அவருடன் சேர்ந்து 5 பேர் வேட்பாளர்களாக இப்போது உள்ளனர்.

ஜனநாயகக் கட்சி வட்டாரங்களில் செல்வாக்குப் பெற்றிருக்கும் கிளிண்டன் அமெரிக்காவை உதாசீனம் செய்வதாக ஜனாதிபதி புஷ் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

1992 ஜூலை நியூயோர்க்கில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு நடைபெறவுள்ளது. நவம்பர் மாதம் தேர்தல் நடைபெறும்.

## ஆற்றுக்குள் பஸ்; 35 பேர் பலி!

பங்களாதேஷில் ஆற்றுக்குள் பஸ் வண்டியொன்று பாய்ந்ததில் 12 குழந்தைகள் உட்பட 35 பேர் கொல்லப்பட்டனர், 25 பேர் படுகாயமடைந்தனர்.

துர்க்கை பூஜை பண்டிகைக்காக யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ்வண்டியே பாதையை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

★ தஞ்சமடைந்தோரின் 6 பஸ்கள் தீக்கிரை

★ முகாம்கள் மீது குண்டு வீச்சு

# அகதிகள் மீதான தாக்குதல் ஜேர்மனியில் தீவிரமடைகிறது!

ஜேர்மனியில் அகதிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் மேலும் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு அகதிகள் தங்கியுள்ள மேலும் பல முகாம்கள் கடந்த சில தினங்களில் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. அகதிகள் அந்தஸ்துக்கோரியுள்ளோரை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் ஆறு பஸ்கள் கடந்த வியாழக்கிழமை அங்கு தீக்கிரையாக்கப்பட்டன இதேபோன்று அகதிகளுக்கு எதிராக மேலும் பல வன்செயல்களும் நிகழ்ந்துள்ளன.

வலதுசாரி தீவிரவாதிகளே ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ள அகதிகளின் மீது தாக்குதல்களைத் தொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையில் வேடுவர் இனம் முற்றாகவே மறைகிறது!

சில ஆண்டுகளில் இலங்கையில் வேடர்பரம்பரை முற்றாகவே மறைந்து விடும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது மஹியங்கனைப் பகுதியிலேயே வேடுவர்கள் காணப்படுகின்றனர். வேடுவர் இனம் அழியாது பாதுகாப்பதற்காக இலங்கை அரசு அவர்களுக்கு பல்வேறு விதமான உதவிகளையும் வழங்கிவருகின்றது.

இந்த உதவியினால் வேடுவர்கள் தமது காட்டு வாழ்க்கை முறையை மறந்து, நாகரிக வாழ்வுக்கு மாற முற்படுவதாகவும் இதனால் இலங்கையில் வேடர் இனம் விரைவில் அழிந்துவிடும் நிலை காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## வலதுசாரிகளைத் தேடி ஜேர்மன் பொலிஸார் வேட்டை

அகதிகள் மீது தாக்குதலை நடாத்தும் வலதுசாரிக் குழுக்களை கைதுசெய்வதற்காக ஜேர்மன் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக கிழக்கு ஜேர்மனியின் 12 நகரங்களிலுள்ள நாற்பது தரிப்பிடங்களின் மீது பொலிஸாரினால் திடீர் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இத்தேடுதலின் போது வலதுசாரிகள் அதிகளவில் சிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சுதந்திரக் கட்சி செயலராக தர்மசிறி; சூரியப்பெரும பதவி நீக்கம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக மேற்படி கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மசிறி சேனநாயக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கட்சியின் மத்திய கமிட்டி இந்த முடிவை எடுத்தது.

இதுவரை சுதந்திரக் கட்சியின் செயலாளராகவிருந்த ஜே.ஈ பி சூரியப்பெரும பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## ஆண்டு நிறைவுவிழா ஒத்திவைப்பு

இன்று நடைபெற இருந்த கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய 21 வது ஆண்டு நிறைவு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது எனவும் புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச ஊழியருக்கு ஒரு மாதத்திற்குள் ஓய்வூதியம்

அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெற்று ஒரு மாதத்துக்குள் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குமாறு பணிக்கும் சுற்றறிக்கை ஒன்றை பொது நிருவாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

20வருட சேவைக்காலத்தை கொண்ட அல்லது 55 வயதினைப் பூர்த்தி செய்த அரச ஊழியருக்கு அவர் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 70 சதவீதத்தை தற்காலிகமாக செலுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென வும் இச்சுற்றறிக்கை மூலம் பணிக்கப்பட்டுள்ளது, (06)

## இல. 400 கோடி ரூபாவினை ஜப்பான் கடனாக வழங்குகிறது

ஜப்பான் இலங்கை அரசுக்கு 400 கோடி ரூபாவினைக் கடனாக வழங்கமுன்வந்துள்ளது

பொருளாதார மீளாய்வுத் திட்டத்திற்குஇந்த கடன் உதவி பயன்படுத்தப்படுமென அறிவிக்கப்படுகின்றது.

ஜப்பான் அரசு முன்னரும் இலங்கை அரசுக்கு பெருந்தொகைப் பணத்தை நிதியுதவியாக வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மதுராந்தகம் சிறையிலிருந்து 3 தமிழ் இளைஞர் தப்பியோட்டம்

தமிழகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ஈழத்தமிழ் இளைஞர்கள் தப்பியோடியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழகம் மதுராந்தகம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களே தப்பியோடியதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது

★ ஆணைக்குழுமுன் விதவைப்பெண் ;-

## 'முந்தானை முடிச்சிலிருந்த தங்க நகைகளை! இராணுவ சிப்பாய்கள் பறித்தெடுத்தனர்'

'குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதும் பீதி காரணமாக மங்களேஸ்வரி என்பவரின் வீட்டுக்குள் ஓடினேன். எனது 20 வயது மகளும் என்னுடன் அங்கு ஓடிவந்தார். அங்கு வந்த இராணுவத்தினர் என்னைத் தாக்கினர். எனது அருகில் எனது சேலையைப் பிடித்துக் கொண்டிருந்த மகளை என்னிடம் இருந்து அருகிலுள்ள அறையொன்றுக்கு இராணுவத்தினர் இழுத்துச் சென்றனர்.

இவ்வாறு கொக்கட்டிச் சோலை சம்பவங்களை விசாரணை செய்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த மட்டு. முதலைக்குடாவைச்சேர்ந்த சரவணை செல்லமுத்து (65) என்ற விதவைப்பெண் தெரிவித்தார்.

சாட்சி மேலும் தெரிவித்ததாவது;

'எனது சேலையில் 5000 ரூபா பணம், 3½ பவுண் நகை என்பவற்றை முடித்து வைத்திருந்தேன் அதை இராணுவம் பறித்தெடுத்து விட்டது.

குறுக்கு விசாரணையின் போது சாட்சி மேலும் தெரிவித்ததாவது.

சட்டத்தரணி:- மங்களேஸ்வரி வீட்டுக்கு உம்முடன் வேறு யார் ஓடிவந்தனர்?

சாட்சி:- மகள்மூத்தமகளின் பிள்ளைகளும்

சட்ட;- உமது மகளை இராணுவத்தினர் அறையொன்றுக்குள் இழுத்துச் சென்றதைக் கண்டீரா?

சாட்சி: ஆம் (சாட்சி அழுகிறார்.

சட்ட:- அதன் பின் உமது மகள் சுயநினைவிழந்தார்?

சாட்சி;- ஆம் - பின்னர் அறையினுள் இருந்து அவரை வல்லிபுரம் என்பவரின் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன்.

சட்ட:- தோட்டை நீராகவே இராணுவத்துக்கு கழற்றிக் கொடுத்தீரா?

சாட்சி;- கத்தியால் காதை வெட்ட வந்தனர். அதனால் கழற்றிக் கொடுத்தேன்.

சாட்சியின் மகள் சரவணை பேரின்பநாயகி அங்கு சாட்சியமளிக்கையில் தனது இரண்டு மோதிரம்,ஒரு நெக்லஸ் என்பவற்றை இராணுவத்தினர் பறித்தெடுத்ததாகவும், அறையில் நடந்த சம்பவத்தால் தான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆணைக்குழு முன் வேறு பலரும் சாட்சியமளித்தனர். (06)

## வடபகுதி கல்வி அலுவலகங்களில் ஆசிரியர் நியமன விவரம்

புதிதாகப் பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான விவரங்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள சகல கல்வித் திணைக்கள அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்விச்சேவைகள ஆணைக்குழு அறிவித்துள்ளது

விஞ்ஞான, கணித பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை பற்றிய விவரங்களை கல்வித்திணைக்கள அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானிப் பத்திரிகை விளம்பரத்திற்கு ஏற்ப போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்

## வணிக உபவள நிலையம்

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்கான வணிக உபவள நிலையம் அண்மையில் யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளரினால் இராமநாதன் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது. (37)

## 'அனேகமான சடலங்கள் உருக்குலைந்த நிலையிலிருந்தன'

'கொக்கட்டிச் சோலையில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட சடலங்களில் அனேகமானவை உருக்குலைந்த நிலையிலேயே இருந்தன'.

இவ்வாறு கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் குறித்து விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக் குழுமுன் சாட்சியளித்த மட்டக்களப்பு வைத்திய சாலையின் கனிஷ்ட மருத்துவ அதிகாரி இரத்தினசிங்கம் கணேஷ்வரன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டோரில் 38 பேரின் உடல்களை நானே பிரேத பரிசோதனை செய்தேன். அவை சம்பவம் நடந்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்து பின்னர் மீட்கப்பட்டவையாகும் அச்சடலங்களில் அனேகமானவற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (06)

## தூயநோட்டுக்கள் உபயோகம்; மத்திய வங்கி விசேட திட்டம்

இலங்கை மத்திய வங்கி தேசிய மாகாண மட்டத்தில் பணச்சுற்றோட்டத்தில் மக்கள் மத்தியில் தூய நோட்டுக்களை உபயோகத்தில் கொண்டுவரும் வகையில் விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது

இதன் முதற்படியாக வங்கிகளில் வைப்புப்பணத்தை மீளப்பெறும்போதோ,மற்றும் வங்கியுடனான பணக்கொடுக்கல் வாங்கலின்போதோ தூய நோட்டுக்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

மக்கள் மத்தியில் பண நோட்டுக்களுக்கு சேதம் விளைவிக்காமல் கவனமாகக் கையாள்வதைக் கற்பிப்பதே இந்த விசேட திட்டத்தின் நோக்கமாகும் (06)

## வவுனியா ரயில் நிலையத்தில் தரகர்களின் தொல்லை

வவுனியா ரயில் நிலையத்தில் தரகர்களின் தொல்லை அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் நிலையத்தில் பயணிகளின் பொதிகள் சோதனை நடவடிக்கையின் போது எல்லோருக்கும் முன்னதாக சோதனைகளை இலகுவாக முடித்துத்தருவதாகவும்,ரயில் நிலையத்திலிருந்து தாண்டிக்குளத்திற்குச் செல்லும் பஸ் வண்டிகளில் இடம்பிடித்துத் தருவதாகவும் ஆசைகாட்டி இவர்கள் பணம் பறிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரத்தில் வைத்தே ரயிலில் ஏறிவிடும் இவர்கள் 'வவுனியா ரயில்நிலையசோதனைகள் கடுமையானவை - பிந்தினால் நேரத்திற்கு தாண்டிக்குளம் செல்ல முடியாது' எனக் கூறி ரயிலில் இருந்து பொதிகளை இறக்கி பஸ் வண்டிகளில் ஏற்றுவதற்கு 200 ரூபா வரை கறந்து விடுகின்றனராம். (06)

## மூதாதையர்முன்னர் பயன்படுத்திய களிமண் சிகிச்சை மீண்டும்!

நம் மூதாதையர்களால்முன்னர் பயன்படுத்தப்பட்ட களிமண் சிகிச்சையை இத்தாலியிலுள்ள மருத்துவமனையொன்று மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

இத்தாலி பாதுவா என்ற நகரில் அமைந்துள்ள இந்த மருத்துவ நிலையம் இவ்வைத்திய சிகிச்சைக்கென பிரத்தியேகக் கிளினிக் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

மூட்டு வலிகளுக்கும், சிலதோல் வியாதிகளுக்கும் இந்தக் களிமண் சிகிச்சை நல்லபலன் அளித்து வருகின்றதாம். (16)

## தஞ்சை விமானநிலையத்தை தமிழக அரசு விஸ்தரிக்கிறது

தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கு தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

குறித்த விமான நிலையத்துக்கு அருகில் உள்ள 1700 ஏக்கர் காணி இதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை விமானநிலையம் விமானப்படை விமானங்கள் இறங்கி ஏறுவதற்கு ஏதுவாகவே விஸ்தரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அகதிகள் தஞ்சம்

குருநகரிலிருந்து வெளியேறிய மக்கள் சென்பற்றிக்ஸ் கல்லூரி, குருநகர் யாகப்பர் ஆலயம், அடைக்கலமாதா கோயில் ஆகிய இடங்களில் அகதிகளாய் தஞ்சம்புகுந்துள்ளனர்.

கொட்டடிப்பகுதியிலுள்ளமக்கள் இடம் பெயர்ந்து நல்லூர் சாதனாபாடசாலை, நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலை நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்திலும் தஞ்சம் புகுந்துள்ளனர். 07

● கண்டியில் ஜனாதிபதி உரை

# காமினியின் நடவடிக்கையினால்தான் வடகிழக்கு தீவிரவாதம் தோன்றியது

''எனது அரசுக்கு எதிரான சதி முயற்சி இன்னமும் முடிவடையவில்லை. தற்போதைய நடவடிக்கைகள் ஆரம்பமே இது எனது உயிரைக் கூட பலிகொள்ளலாம் ஆனால் இதை நாம் லட்சியம் செய்யக் கூடாது''

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று மாலை கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார். அரசு தனது பிரசாரக் கூட்டத்தின் முதலாவது கூட்டத்தை கண்டியில் நடாத்தியுள்ளது.

ஜனாதிபதி தொடர்ந்து அங்கு பேசுகையில் 'வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக்காண அரசு விருப்பம் கொண்டுள்ளது வடக்கு கிழக்கில் அமைதியின்மை தோன்றக் காரணம் காமினி திஸநாயக்காதான்.

''நான் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது வடக்கு கிழக்கில் அபிவிருத்திச்சபை தேர்தல் நடைபெற்றது. அப்போது காமினி திஸநாயக்கா வடக்கில் தேர்தலை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இதற்கான ஆதாரத்தை ஹன்சார்ட்டில் உள்ள அமிர்தலிங்கத்தின் உரையில் காட்ட முடியும். காமினியின் இந்நடவடிக்கையினாலேயே தமிழ் இளைஞர்கள் தீவிரவாதத்தை நாடினர்,

''ஜே, வி, பியை யார் வளர்த்தார்கள் லலித் பதவியில் இருக்கும் போது அவர்களை அடக்க முடியாமல் இருந்தார். நான் ஜே, வி. பியை அடக்கினேன்': மக்கள் ஐ. தே, கவிற்கே வாக்களித்தனர். தனிநபர்களுக்கல்ல தனிநபர்களை ஆதரிக்கும் வழமை மக்களிடம் எப்போதோ மறைந்துவிட்டது,

''ஏழு பேர் கொண்ட அதிருதியாளர் குழு கூட்டங்களில் தகாத வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகிறது இது உகந்ததல்ல

எதிர்க்கட்சியினர் எப்படிப் பட்டவர்கள் என்பதை அவர்கள் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டதிலிருந்து அறிந்திருப்பீர்கள் பாலர் பாடசாலையில் மதிய போசனம் வழங்கப்படுவது தாமதமானால் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ அதே போன்று எதிர்க்கட்சியினர் நடந்துள்ளனர், தமக்கு அதிகாரம் கிடைக்கவேண்டும் என வெறிகொண்டு அலைகின்றனர்.

காமினி குறித்து முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அதிருதி கொண்டிருந்தார். இவ்விடயத்தை அவர் எனக்குக் கூறியபோது அது குறித்து பெரிதுபடுத்த வேண்டாம் என நான் அவருக்கு கூறினேன் இதை பின்னர் காமினி அறிந்து எனக்கு தனது நன்றியை தெரிவித்தார்.

1987 இலும் ஐ, தே, கவிற்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டுவர ஓர் எம் பி விரும்பினார் ஆனால் நான் அதை தடுத்து விட்டேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## அராலிக்கடலில் சிக்குண்ட படகுகளை படையினர் மீட்பு

அராலி 'சொத்திக்கட்டி' துறைப்பகுதியில் கடற்பாறையில் சிக்குண்ட படையினரின் இரு விசைப்படகுகளும் நேற்றுக்காலை அவ்விடத்தில் இருந்து படையினரால் மீட்கப்பட்டு விட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீட்பு நடவடிக்கைக்காக கடற்படையினர் ஆறு படகுகளை தம்முடன் கொண்டு வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 01. 07

## வடமராட்சி மக்கள் மீண்டும் திரும்புகின்றனர்

வடமராட்சிப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் நேற்றுவரையில் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது

வடமராட்சிப்பகுதியில் நேற்று வரை எதுவித பிரச்சினைகளும் ஏற்படவில்லை என்பதால் தாம் திரும்புவதாக வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சி கடற்பகுதிகளில் கடற்படைப்படகுகள் ரோந்து நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

## இடம்பெயர்ந்த மக்கள் யாழ் ஆஸ்பத்திரியில் தஞ்சம்

நேற்றுக்காலை கொட்டடி, பண்ணை, குருநகர் பகுதிகளில் ஷெல், வான் தாக்குதல்கள் திடீரென நடைபெற்றதால் இ பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறத் தொடங்கினர்.

பலர் பாதுகாப்பு வலயப் பகுதியிலும் பெரியாஸ்பத்திரியிலும் தஞ்சம் புகுந்ததைக் காணமுடிந்தது.

நண்பகல் நிலைமை வழமைக்குத் திரும்பவே இவர்கள் தத்தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர் 07

## வடமராட்சி அகதிகளுக்கு இன்று முதல் நிவாரணம்

வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கும், வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கும் இன்று முதல் உலர் உணவு நிவாரணப் பணிகள் மேற்கொளளப்படவிருக்கின்றன.

கோப்பாய் உதவி அரச அதிபர் எஸ். முருகேசபிள்ளை இதற்கான நடவடிக்கை எடுத்து இன்று குறிக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுவுச் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவிருக்கின்றன.

அ அட்டை உள்ளவர்களுக்கு இலவசமாகவும் 'உ' அட்டை உள்ளவர்களுக்கு பணத்துக்கும் உலர் உணவுப் பொருள்கள் ஒரு வாரத்துக்கு மட்டும் வழங்கப்படவிருக்கின்றன. 07

### பரவலாக...

கொண்டனர்.

சுமார் பத்திற்கு மேற்பட்ட ஷெல் குண்டுகள் குடிமனைகளைநோக்கி வீசப்பட்டன.07

### இரத்தம் தேவை ..

தேவையறிந்து பொதுமக்கள் இரத்தம் வழங்கும்படியும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 07

### யாழ் ஆஸ்பத்திரி

சென்றனர். மருந்தக ஊழியர்களும் சென்றதால் விடுதிகளிலிருந்து வெளியேறிய நோயாளர்கள் பலர் மருந்தெடுக்க முடியாத நிலையேற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

### நேற்று ..

ணிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கோட்டைப் பகுதியிலும் நூல் நிலையப் பகுதியிலும், தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திலும் குருநகர் கடற்பகுதி, 2 ஆம், 3 ஆம், 4 ஆம், குறுக்குத்தெரு பகுதியிலும் பண்ணைப்பகுதியிலும் வீழ்ந்து வெடித்துள்ளன.

2 ஆம் குறுக்குத் தெருவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் 4ஆம் குறுக்கைச் சேர்ந்த மரியாம்பிள்ளை இருதயதாஸ் (37) என்பவர் காயமடைந்தார். (07)

### அரசாங்க...

நிவாரண உதவி பற்றியும் விமானப்படையின் கண்மூடித்தனமான குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல் பற்றியும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் அரச அதிபர் பேசவிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (06)

### மண்டைதீவு ...

வியாக ஹெலிக்கொப்டர்கள் பலதடவைகள் மண்டைதீவில் தாழ்வாகப்பறந்து சென்றதையும் காணக்கூடியதாக இருக்கிறது. 01

### யாழ்...

இதேவேளை ஹெலிகொப்டர் ஒன்று யாழ், பண்ணை, கொட்டடி, நவாந்துறை, ஆனைக்கோட்டை கரையோரப் பகுதிகளிலும் கலிபர் தாக்தாக்குதல்களை மேற்கொண்டது (06, 07, 15)

## செஞ்சிலுவை தொண்டர் சேவை

நேற்று முற்பகலிலிருந்து செஞ்சிலுவைச் சங்க தொண்டர் படையினர் செஞ்சிலுவை சின்னம் பொறிக்கப்பட்ட மேலுறையுடன் ஆஸ்பத்திரி வீதியில் ஆண், பெண் வேறுபாடின்றி சேவை செய்ததுடன், போக்குவரத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டனர். (07

### குடாநாட்டு—

வீச்சு, கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலே அதிகமாக இடம் பெறுவதால் பல முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ் அடைக்கலமாதா ஆலயத்தில்

## தீவக அகதிகள் வெளியேற நகர அகதிகள் தஞ்சம்!

நேற்றுக்காலை தொடக்கம் முற்பகல் வரையில் யாழ் பண்ணைப் பகுதிகளில் இடம்பெற்ற ஷெல் - விமானக் குண்டு வீச்சுச் சம்பவத்தினையடுத்து நகர்ப்பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த ஆயிரக் கணக்கான தீவக அகதிகள் பிற இடங்களுக்கு சென்றுள்ளனர். யாழ் அடைக்கல மாதா கோயிலிலும் பாடசாலையிலும் தஞ்சமடைந்திருந்த தீவக அகதிகள் பிற இடங்களுக்குச் சென்றதையடுத்து வேறு அகதிகள் அத் தேவாலயத்தில் வந்து தங்கியுள்ளனர்.

கொட்டடி, குருநகர்ப்பகுதிகளிலிருந்தும் மக்கள் நேற்று மாலை வரையில் இடம் பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கோயில்கள், பாடசாலைகளை நோக்கி சென்றபடியிருந்ததைக்காணக் கூடியதாக இருந்தது. 07

## வடமராட்சி மக்களுக்கு சாவகச்சேரியில் நிவாரணம்

வடமராட்சிப் பகுதியில் இருந்து வெளியேறிய அகதிகளில் ஒரு தொகுதியினருக்கு நேற்று சாவகச்சேரியில் வைத்து யாழ் செஞ்சிலுவைச் சங்கம் உடனடி நிவாரண உதவிகளை மேற்கொண்டது.

மீதித் தொகுதி இன்று வழங்கப்படவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குடும்பங்களின் எண்ணிக்கைக் கேற்பவே இவ்வுதவி செய்யப்படுவதாவும் அரிசி, மா,சீனி, பருப்பு போன்றவை வழங்கப்பட்டுள்ளன. 01

## கே. ஆர். பி. சூரியபெருமா ஐ. தே. கவில் சேருவார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜே. ஆர் பி, சூரியப் பெருமா ஐக்கிய தேசியக்கட்சியில் சேருவார் என கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மைக்காலமாக செல்வாக்கு இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ தே கவில் இவர் சேர்ந்தால் முக்கிய பதவி வழங்கப்படலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## மாலையும் நகரை நோக்கி பலாலியிலிருந்து ஷெல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 5.30 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் யாழ் நகரை நோக்கி நடாத்தப்பட்டன.

ஷெல்கள் யாழ் கோட்டையை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. 01

## அரச அதிபர் நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்கள ஊழியர்களுக்கான இடர் கொடுப்பனவுகளை வழங்க யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த ஊழியர்களுக்கு இதுவரை காலமும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென அரச அதிபரை யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. பாலகிருஷ்ணன் தலைமையில் சென்ற தூதுக்குழு சந்தித்து முறையிட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கான நிதி கொழும்பிலிருந்து கிடைக்காததால் அரச அதிபர் தமது நிதியில் இருந்து வழங்க உடன் நடவடிக்கை எடுத்துள்ளார். (06)

### இருவர்—

யத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இடபொருள்கள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 08

## சாரணர்களுக்கு அழைப்பு

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள், சாரணத் தலைவர்கள். திரிசாரணர்கள், மற்றும் சாரண உத்தியோகத்தர்கள் ஆகியோரை இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுக்கொள்கின்றார்'

## வதந்திகள் பரவின

நேற்று யாழ் நகரில் பல்வேறுபட்ட வதந்திகள் பரவின. நிலைமையை வாய்ப்பாகக் கொண்டு சில விஷமிகளால் பரவப்பட்ட இவ் வதந்திகளால் பொதுமக்கள் பதற்றமடைந்தனர்.

### இராணுவம்...

காப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லெப். கேணல் ஜயம்பதி விஜரட்னா, பிரிகேடியர் திஸ்ஸ திலகரட்ன ஆகியோரின் தலைமையில் 5 ஆவது கெமுனு படைப் பிரிவும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனவாம்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 20.10.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.